டொட்ஸ்( நேரடி அவதானிப்புச் சிகிச்சை முறை): **கையேடு**

(காசநோய்த்தடுப்பும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்திட்டம்)

மின் வடிவம்: **TuberculosisJaffna.com**

**டொட்ஸ் - DOTS**

காச நோயாளிகளைச் சுகப்படுத்துவதற்கும் காச நோயைத் தடுப்பதற்கும் குறுகிய கால நேரடி அவதானிப்புச் சிகிச்சை முறையே DOTS இன்றுள்ள சிறந்த உபாயமாக அறியப்பட்டுள்ளது. இது எவருக்கும் தெரிந்ததும், சிறந்த நல்ல பலனளிக்கவல்லதும் இலகுவாக அணுகப்படக்கூடிய முறையும் ஆகும்.

தொற்று ஏற்பட்ட காச நோயாளிகளை அடையாளம் காண்பதும் அவற்றை முற்றாக கணப்படுத்தலுமே DOTS முறையின் குறிக்கோளாக உள்ளது.

**DOTS ன் ஐந்து அம்சங்கள்**

- அரசியல் சார் பொறுப்பு
- மூன்று வாரங்களுக்கு மேலாக இருமல் இருக்கும் சளி மாதிரியை நுணுக்குக்காட்டி சளிப்பரிசோதனைக்கு உட்படுத்தி காசநோயாளிகளைக் கண்டுபிடித்தல்.
- காசநோய்க்கு எதிரான தரமான மருந்துகளின் தொடரான வழங்கல்.
- ஒரு தர நிர்ணயத்துக்கு அமைவான தரவுகள் தெரிவித்தல், பதிவுசெய்தல் முறையைக் கையாளல். இதனால் இத்திட்டத்தின் நோக்கான தனிப்பட்ட நோயாளியின் சுகமடைதல் மதிப்பீட்டுடன், ஒட்ட மொத்த செயற்திட்டத்தின் செயற்பாட்டையும் அளவிடுவதாக இருக்கும்.

**DOTS என்பது என்ன**

DOTS ன் கீழ், காச நோயாளர்கள் அனுமதிக்கப்பட்ட தரமான மருந்துகளுடன், நேரடி அவதானிப்பில் சிகிச்சை பெறுகிறார்கள். இது குறைந்த பட்சம் மொத்த சிகிச்சைக் காலத்தின் முதலாவது காலகட்டத்தில் (அதாவது புதிய நோயாளர்கள் முதல் இரு மாதங்கள், மீண்டும் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டவர்கள் முதல் மூன்று மாதங்கள்) மருந்து உட்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடைபெறுகிறது.

**DOTS - சிகிச்சை நிலையங்கள்**

நோயாளி தினமும் சென்று ஒரு சுகாதார சேவையாளர் முன்னிலையில் மருந்தை உட்கொள்ளும் இடம் DOTS - சிகிச்சை நிலையம் ஆகும். ஒரு பிரதேசத்தில் காணப்படும் அரச சுகாதார நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்ட DOTS - சிகிச்சை நிலையங்கள் ஆகும். (உ-ம்) வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி / பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (MOH/ DDHS office) மற்றும் மருத்துவ நிலையங்கள் (clinics). இந்நிறுவனங்களில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் அவதானிப்பாளர்களாகச் செயற்படுவர். (உ-ம்) தாதியர், மருந்துக் கலவையாளர்கள், மருந்தாளர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் (PHI) பொதுச்சுகாதார குடும்ப நல சேவையாளர்கள் (PHM)

**DOTS - சிகிச்சை நிலையத்தைத் தெரிவு செய்தல்**

நோயாளி ஒருவர் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் DOTS - சிகிச்சைக்காக பதிவு செய்யப்படும் போது அவர் இந்த சிகிச்சைக்காலத்தில் வசிக்கும் பிரதேசத்திலுள்ள சிகிச்சை நிலையங்களின் பட்டியல் ஒன்று அவருக்கு தரப்படும். ஒரு சுகாதார நிறுவனத்தை அல்லது இடத்தை

தாமாக தெரிவ செய்யலாம். அது அவருக்கு வசதியானதாகவும் தினமும் வந்து ஒழுங்காக மருந்து உட்கொள்ள இலகுவாகவும் இருக்கும்.

**நேரடி அவதானிப்புச் சிகிச்சை ஏன் அவசியம்?**

குறைந்தது மூன்றில் ஒரு பகுதி நோயாளர்கள் சுயமாக சிகிச்சை பெறுவதனால் சரியான சிகிச்சைக்கு உட்படாது போகின்றனர். இதனால் எந்த நோயாளி மருந்தை உட்கொள்வார் என்று முன்னேற்பாடாக கூறுவது அசாத்தியமானதாகும். எனவே நோயாளி சரியான சிகிச்சைக்கு உட்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், சளிப்படலப் பரிசோதனையில் முன்ஆனற்றத்தை அடைவதற்கும், குறைந்தது சிகிச்சையின் முதலாவது காலகட்டத்திலாவது நேரடி அவதானிப்பு அவசியமாகின்றது.

ஒரு காச நோயாளி ஒரு தடவையேனும் மருந்து உட்கொள்வதற்கு வரத் தவறும் பட்சத்தில் உடனடியாக அவரைத் தேடிப்பிடித்து, ஆலோசனை தரமுடிகிறது. புதிய நோயாளிகளில் (New smeer Possitive cases) 85% மானவர்கள் சுகப்படுத்தல் மட்டத்தை அடைவதற்கு நேரடி அவதானிப்புச் சிகிச்சை முறையைத்தவிர வேறு முறைகள் இல்லை.

**DOTS ன் நன்மைகள்**

எங்கு **DOTS** சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதோ அங்கு 85% நோயாளிகள் கணமாகும் வீதம் எட்டப்படுவது உறுதிப்படுத்தப்படுகிறது. இது மிகப் பின் தங்கிய மாவட்டங்களில் சாத்தியமாகின்றது. குாச நோய் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்துகின்றது.

புல கூட்டு மருந்துகளுக்கு எதிர்ப்புத் தன்மை உடைய (MDR- TB) காச நோய் ஏற்படும் அபாயத்தை DOTS தடுக்கிறது.

**DOTS அணியின் அங்கத்தவர்கள்**

*பின்வரும் விடயங்களில் ஈடுபடும் நபர்கள்*

- கொள்கை திட்டமிடல் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.
- சந்தேகப்படத்தக்க நோயாளிகளை (வைத்தியப் பரிசோதனைக்காக) வழிப்படுத்துதல்
- நுணுக்குக்காட்டிச்சேவை
- நோயாளிகளைப் பதிதலும் DOTS க்கு உட்படுத்தலும்.
- சிகிச்சை பெறுவதை அவதானித்தல் (DOTS வழங்குனர்கள்)
- மருந்து உட்கொள்ளுதலின் நடத்தையை, சிகிச்சையின் பெறுபேற்றை கவனித்தலும் தொடர் அவதானிப்பை மேற்கொள்ளலும்.

| |
|---|
| காச நோய் கட்டுப்படுத்தப்படுத்தப்படுவதும் தொடர்ந்து இருப்பதும் DOTS அணியின் அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பிலேயே தங்கியுள்ளது. |

## கொள்கை திட்டமிடல் தீர்மானங்களை மேற்கொள்பவரின் பங்களிப்பு

- கொள்கை.'. தீர்மானங்களை மேமற்கொள்பவர் என்ற முறையில் தனியே ஒரு மருத்துவப் பிரச்சனை என்றில்லாமல் ஒரு சமூகப்பிரச்சனை என்ற வகையில் காச நோயைக் கையாளுவது பற்றி எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.
- தேசிய பொருளாதாரத்தில் காச நோய் ஏற்படுத்தும் பாதிப்பை விளங்கிக் கொள்ள வேண்டும்.
- காச நோய்த் தடுப்புச் செயற்திட்டத்திற்கு உறுதியான நிர்வாக ரீதியிலான ஆதரவை வழங்குவதோடு காச நோய்க்கு முன்னுரிமையும் தரப்பட வேண்டும்.
- DOTS செயற்பாடானது முழு மாவட்டத்தையும் அல்லது முழுமாகாணத்தையும் சென்றடையும் வகையில் விரிவாக்கப்படவும் பலப்படுத்தப்படவும் தேவையான வளங்களைப் பெற்றுத் தரவேண்டும். அத்துடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் காச நோய்த் தடுப்பிற்கான தேசிய செயற்திட்டத்தின் பங்குபற்றுனராக செயற்பட வேண்டும்.
- DOTS தேவைப்படுபவர்களுக்கு அது எவ்வித பாகுபாடுமின்றி கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- DOTS உபாயமானது நிரந்தரமாகச் செயற்படும் வகையில் தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள். சமூக நிறுவனங்கள் காச நோயைக்கட்டுப்படுத்தும் விதத்தில் பெருமளவு ஈடுபடும் வகையில் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

**காசநோய்த் தடுப்பிற்கான சேவையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பிரஜையும் தமது உரிமையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட உரிய இட்ங்களில் நடைமுறைப்படுதலை உறுதி செய்வதே எமது தலையாய கடமை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.**

## மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றுபவரின் பங்களிப்பு

மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றும் ஒருவர் மாவட்ட மட்டத்தில் காசநோய்த் தடுப்பு செயற்பாடுகளை அமுல் செய்வதில் பொறுப்புள்ளவராக இருக்கிறார். அத்துடன் தேசிய மட்டத்தில் செயற்திட்டத்துடன் இணைப்பை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.

*பிரதானமாக கவனிக்க வேண்டிய காச நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்*

- ✓ வழிப்படுத்தப்பட்டுவரும் சந்தேகத்துக்கிடமான நோயாளிகளை காசநோய்க்கான பரிசோதனைக்கு உட்படுத்தல்.
- ✓ காசநோயாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களை DOTS நடைமுறைக்கு உட்படுத்தல்.
- ✓ உரிய சிகிச்சை நிலையங்களுக்கு காசநோய்க்கு எதிரான மருந்துகளை வழங்கல்.
- ✓ பின்வருவனவற்றை கவனித்தலும் மதிப்பிடுதலும்
    - குறித்த மாவட்டத்தில் DOTS உபாயத்தின் செயற்பாடுகள்
    - சளிப்படலப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் காசநோயாளர்களின் சிகிச்சைப் பெறுபேறுகள்.

## மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையங்களில் காச நோயாளர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள்

- ✓ மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள முடிதல்
- ✓ விசேட காரணங்களுக்காக மருத்துவ நிபுணர் குழுவின் முன் பிரசன்னமாவதோடு சம்பளத்துடனான விடுமுறையைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டுதல்.
- ✓ வறுமை நிவாரணத்தின் தேவையுள்ள நோயாளிகளுக்கு நிதியுதவி கிடைத்தல்.
- ✓ விசேட மருத்துவ விடுமுறையைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம்.

- **நோயாளர்களுக்கும் சுகாதார சேவையாளர்களுக்கும் இடையில் நல்ல இணைப்பை மேற்கொள்ளல்.**
- **பதிவுகளை ஒழுங்காக மேற்கொள்ளல்.**
- **சுளிப்படலப் பரிசோதனையின் பெறுபேறுகளை சரியாக அவதானித்தல்.**
- **நோயாளர்களுக்கு அவர்களது சுகநல மேம்பாடு பற்றி அறிவித்தல்.**

## DOTS அவதானிப்பாளர்களின் பங்களிப்பு

- DOTS அவதானிப்பானர் நோயாளியால் மருந்து உட்கொள்ளப்படுவதை அவதானிப்பவராக இருக்கிறார்.
- ஒரு DOTS அவதானிப்பாளர் காசநோய் பற்றிய பின்வரும் வடயங்கள் அடங்கிய தகவல்களால் நோயாளிக்கு அறிவூட்டுபவராக இருக்கிறார்.
  - நோய்க்கான காரணி
  - நோய் எப்படி தொற்றுகிறது.
  - சிகிச்சை.
  - தடுப்பு முறைகள்
- ஒரு DOTS அவதானிப்பாளர் காசநோய்க்கான சிகிச்சையின் போது ஒன்றன் பின் ஒன்று என்ற அடிப்படையில் தகவல்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - தொடரும் DOTS ன் முக்கியத்துவத்தின் படி
    - ஒழுங்காக உட்கொள்ளுதல்
    - சரியான மாத்திரை அளவுகள்
    - சரியான மருந்துகளின் சேர்க்கை
    - சரியான கால அளவு
  - ஏற்படக்கூடிய பக்க விளைவுகளும் அதற்கான செய்யத்தகுந்தவையும்
- காசநோயாளிகளுடன் தொடர்புறும் வகையில் சுகாதார நிறுவனம் ஒன்றில் DOTS அவதானிப்பாளர்களாக செயற்படுபவர்கள்நோயாளிகளுடனும் புலத்தில் செயற்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலுவலர்களுடனும் (பொது சுகாதார பரிசோதகர்கள் , பொது சுகாதாரகுடும்ப நல சேவையாளர்கள்) அல்லது உள்ளூர் சமூகத்தைச் சார்ந்த தொண்டர் சேவையாளர்களுடனும் இணைப்பை உடையவரக இருத்தல் வேண்டும். ஆதன் மூலம் தேவையான வேளையில் நோயாளிகளைஅவர்களிடம் அனுப்பக்கூடியதாக இருக்கும்.
- DOTS அவதானிப்பாளரானவர் நோயாளிகளை ஆற்றுப்படுத்தும் பணியில் திறமை மிக்கவராக செயற்பட வேண்டும்.

## வைத்தியத்துறை சார்ந்தவர்களின் பங்களிப்பு

**மருத்துவ உத்தியோகத்தர்கள்**

- காசநோயாளர்களை விரைவாக அடையாளம் காண்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் ஏற்ற வகையில் காசநோய்த் தடுப்பின் முன்னேற்றங்கள் பற்றி தமது தொழில் சார் அறிவை விரத்தி வெய்து கொள்பவர்களாகவும் தேசிய வழிகாட்டல்களைப் பின்பற்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.
- மாவட்ட மட்டத்தில் காசநோய்த் தடுப்பு செயற்பாடுகளில் இணைந்து செயற்படுபவராகவும் குறிப்பாக காசநோய்க்கட்டுப்பாட்டை காரிய சாதகத் தன்மை உடையதாக்கும் வகையில் சிறந்த சிகிச்சை உபாயத்தை கடைப்பிடிப்பதன் மூலம் சிகிச்சையை வழங்குவதுடன் DOTS மூலம் முகாமை யெ்பவராக இருத்தல் வேண்டும்.
    - சந்தேகப்படத்தக்க நோய் அறிகுறிகளுடன் வரும் சகல நோயாளர்களையும் பரிசீலனைக்கு உட்படுத்தி மூன்று சளி மாதிரிகளைப் பெற்று (AFB- Acid Fast Bacilli) காசநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனையை செய்து உறுதிப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.
    - காசநோயாளிகளாக கண்டுபிடிக்கப்படும் சகல நோயாளிகளும் பதிவு செய்யப்படுவதற்காகவும், DOTS ற்கு உட்படுத்தும் வகையிலும் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- தனியார் சுகாதார நிறுவனங்களில் அடையாளம் காணப்படும் காசநோயாளிகளும் இலவசமான சிகிச்சை பெறும் வகையில் மாவட்ட மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்படலாம். நோயாளி பெறத்தக்க அனுகூலங்களின் உண்மைத்தன்மையைப் பொறுத்து அவர்கள் மார்புநோய் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்றுக் கொள்ளமுடியும்.

**தவறான சிகிச்சையால் ஏற்படக்கூடிய பலகூட்டு மருந்துகளுக்கு எதிர்ப்புத் தன்மையுடைய காசநோய் (MDR-TB) ஏற்படும் அபாயம் பற்றி அவதானமாக இருங்கள்.**

# அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பு

காசநோயைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. காச நோய்த் தடுப்பில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பரந்து விரிந்த பரிமாணம் உடைய செயற்பாடுகளைச் செய்ய முடியும். புாடசாலை சுகாதார நிகழ்ச்சிகளிலிருந்து அதன் எல்லைகள் விரியும். அத்துடன் காசநோயாளர்களை மாவட்ட மார்பு சிகிச்சை நிலையத்தில் இலவசமாக சிகிச்சை பெறும் வகையில் வழிப்படுத்த முடியும்.

**பாடசாலை சுகாதார நிகழ்ச்சிகள்**

சமூக மாற்றத்தின் ஒரு பிரதான சக்தியாக மாணவர்கள் அமைகிறார்கள். அதனால் பாடசாலையைப் போலவே மாணவர்களும் காசநோய்க்கட்டுப்பாட்டில் ஈடுபடுத்தப்படுவது மிகவும் சாதகமான பயனைத்தரக்கூடியதாக இருக்கும். மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால் இவர்கள் தகவல்களை தமது நண்பர்களிடம், குடும்பத்தினரிடம், சமூகத்திடம் எடுத்துச்செல்லக்கூடியவர்களாக உள்ளனர். அதனால் காசநோய் பற்றியும் அதன் கட்டுப்பாடு பற்றியும் தகவல்களைப் பரந்த அளவில் கொண்டு செல்லமுடிகிறது. எனவே அவர்கள் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட பாடவிதானச் செயற்பாடுகளூடாக அறிவூட்டப்பட வேண்டும்.

**DOTS சிகிச்சை சேவைகளை ஒழுங்கிணைத்தல்**

DOTS சிகிச்சையின் நடைமுறையின் மாவட்ட மார்புநோய் சிகிச்சை நிலையத்துடன் இணைப்பதில் தொண்டர் சேவையாளர்கள் தயாராக இருப்பர். அவர்கள் தினமும் DOTS சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தரவேண்டும். அங்கு இருக்கும் DOTS வழங்குனருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் கிடைக்கும் தகவல்களைப் பின்வரும் கடமைகளுக்காக பயன்படுத்த முடியும்.

- DOTS சிகிச்சை நிலையத்துக்கு வருகை தராத நோயாளரை விரைவாகத் தேடுதல்.
- சிகிச்சை காலத்தில் எதுவித முறைப்பாடுகளும் இல்லாத நோயாளிகள் பற்றி மாவட்ட மார்புநோய் சிகிச்சை நிலையத்துக்கு அறிவித்தல்.

**சமூக மட்டத்திலான கவன ஈர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

காசநோய் பற்றிய தவறான புரிதல்களை திருத்திக் கொள்ளும் வகையில் தொண்டர் சேவையாளர்கள் மக்களுக்கு அறிவூட்ட முடியும். இது காசநோய்த் தொற்றுவதற்கும் தடுப்பதற்கும் சிகிச்சைக்கும் ஏதுவாக இருக்கும். தொண்டர் சேவையாளர்கள் சமூகங்களுக்கிடையே மிக நெருக்கமான உறவைப் பேணுவதுடன் இந்தச்செய்திகளைக் கொண்டு செல்வதில் மிகச் சிக்கலான பாத்திரத்தினையும் வகிக்கின்றனர்.

*அதனால் தொண்டர் சேவையாளர்கள் பின்வரும் கடமைகள் மூலம் காசநோரயக் கட்டுப்படுத்தலை உறுதி செய்வார்கள்.*

- ✓ காசநோய்க்குரிய அறிகுறிகளுடன் வரும் மக்களை வைத்தியப் பரிசோதனைகளுக்காக மாவட்ட மார்பு சிகிச்சை நிலையத்துக்கு அனுப்புதல்.
- ✓ மாவட்ட மார்பு சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்ட நபர்களில் தொடர் அவதானிப்பை மேற் கொள்ளல்.
- ✓ காசநோயாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள் சிபாரிசு செய்யப்பட்ட சிகிச்சையை பெற்றுக் கொள்ளுவதை உறுதிப்படுத்திக் கொள்வதோடு அவர்கள் பற்றிய தொடர் அவதானிப்பை மாவட்ட மார்புநோய் சிகிச்சை நிலையத்துக்கு தெரியப்படுத்துதல்.